# பத்திரிக்கைச் செய்தி

65-ஆவது அகில இந்திய கூட்டுறவு வார விழாவை முன்னிட்டு அரியலூர் மாவட்டத்தில் 14.11.2018 முதல் 20.11.2018 வரை கூட்டுறவு வார விழா கொண்டாடப்படுகிறது. வாரவிழாவின் முதல் நாளன்று அரியலூர் வேளாண் விளைபொருள் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில் 14.11.2018 தேதி புதன் கிழமை அன்று காலை 9.00 மணிக்கு அரியலூர் கூட்டுறவு சங்கங்களின் மண்டல இணைப்பதிவாளர் திரு.மு.பழனிவேலு அவர்கள் கூட்டுறவு கொடியேற்றி உறுதி மொழியை வாசிக்கிறார். அதை தொடர்ந்து சங்க வளாகத்தில் மரக் கன்றுகள் நடும் விழா நடைபெற உள்ளது.

15.11.2018 அன்று திரு.சிவகுருநாதன், திருச்சி நகைச்சுவை மன்ற செயலாளர் தலைமையில் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்க செயலாளர் மற்றும் பணியாளர்கள் கூட்டுறவு கருத்தரங்கம் பிற்பகல் 3.00 மணிக்கு மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நடைபெற உள்ளது.

16.11.2018 அன்று அரியலூர் அரசு தலைமை மருத்துவமனையில் இரத்ததானம் முகாம் நடைபெற உள்ளது. இதில் கூட்டுறவு சங்க பணியாளர்கள் மற்றும் பொது மக்கள் கல்லூரி மாணவ, மாணவிகள் கலந்துக் கொண்டு இரத்ததானம் வழங்கலாம். பிற்பகல் துறை அலுவலர்கள் மற்றும் சங்க பணியளர்களுக்கான பேச்சுப்போட்டி, கட்டுரைப்போட்டி, கவிதைப் போட்டிகள் நடைபெற உள்ளது.

14.11.2018 மற்றும் 17.11.2018 அன்று காட்டுப்பிரிங்கியம், தென்னூர், உடையார்பாளையம், வாரணவாசி, அம்பாபூர் ஆகிய தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களிலும், அரியலூர் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கம் மற்றும் மருதூர் கைத்தறி நெசவாளர் சங்கத்திலும் உறுப்பினர் சந்திப்பு முகாம் நடைபெற உள்ளது.

17.11.2018 அன்று கூட்டுறவுத்துறை அலுவலர்கள் மற்றும் சங்க பணியாளர்களுக்கு மாவட்டவிளையாட்டு அரங்கில் விளையாட்டுப் போட்டிகள் நடைபெற உள்ளது. இதில் கூட்டுறவுத்துறை மற்றும் சங்கப் பணியாளர்களுக்கு 100 மீட்டர் ஓட்டப்பந்தயம், குண்டு எறிதல், ஈட்டி எறிதல், கபாடி, வாலிபால் போன்ற பேட்டிகள் நடைபெறவுள்ளது.

18.11.2018 அன்று காலை 8.00 மணியளவில் இடைக்கட்டு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கத்தில் கால்நடை சிகிச்சை முகாம் நடைபெற உள்ளது. அருகில் உள்ள விவசாயிகள் தங்கள் கால்நடைகளை, கால்நடை சிகிச்சை முகாமிற்கு கொண்டுவந்து பயனடையுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

19.11.2018 அன்று மாவட்ட அளவிலான கூட்டுறவு வார விழா அரியலூர் அன்னலெட்சுமி ராஜபாண்டியன் திருமண மஹாலில் மாலை 4 மணிக்கு 65-ஆவது அகில இந்தியா கூட்டுறவு வார விழா "இளைஞர், பெண்கள் மற்றும் நலிந்த பிரிவினருக்கான கூட்டுறவு அமைப்புகள்" என்ற தலைப்பில் மாவட்ட அளவிலான விழாவில் மாவட்ட ஆட்சித் தலைவர், தமிழ்நாடு அரசு தலைமை கொறடா, நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், கூட்டுறவு சங்க தலைவர்கள் மற்றும் பிரதிநிதிகள், கூட்டுறவுத் துறை அலுவலர்கள், விவசாய சங்க பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பங்கேற்று சிறப்பிக்க உள்ளார்கள். விழா முடிவில் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ, மாணவியருக்குப் பரிசுகளையும், பயனாளிகளுக்கு கடன் உதவிகள் வழங்கியும், சிறந்த சங்கங்களுக்கும் கேடயங்கள் வழங்கி விழா நடைபெற உள்ளது என அரியலூர் மண்டல இணைப்பதிவாளர் திரு.மு.பழனிவேலு அவர்கள் தெரிவித்துள்ளார்.